# விரைவு குறியீட்டு வினாக்கள்

## இயல் - 1

1. 'இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே!' - இவ்வடிகளில் பத்தும் எட்டும் குறிப்பவை
   **அ) சங்க இலக்கியங்கள்** ஆ) அற இலக்கியங்கள் இ) காப்பியங்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்
2. பொருத்துக.
   1. மா - i) நாற்று
   2. தென்னை - ii) கன்று
   3. பனை - iii) பிள்ளை
   4. கத்திரி - iv) வடலி

| தெரிவுகள் |
|---|
| அ) 1-iv 2-i 3-ii 4-iii |
| ஆ) 1-i 2-ii, 3-iii 4-iv |
| இ) 1-iii 2-ii 3-i 4-iv |
| **ஈ) 1-ii 2-iii 3-iv 4-i** |

3. "நித்தம் அணைகிடந்தே
   சங்கத் தவர் காக்க" - இவ்வடிகளை ஒத்திருக்கும் கடலின் செயல்
   அ) கடலில் தோன்றும் சங்குகளைக் கரைகாணாதவாறு அணைத்தல்.
   **ஆ) நீரலையைத் தடுத்து நிறுத்திச் சங்கினைக் காத்தல்.**
   இ) மூவகைச் சங்கினைத்தரும் கடலைக் காத்தல்.
   ஈ) கடல் தன் அலைகளால் சங்கினை வெளியே தள்ளுதல்.
4. பொருத்துக.
   1. வினைமுற்று - i) கெடு
   2. தொழிற்பெயர் - ii) கட்டு
   3. முதனிலைத் தொழிற்பெயர் - iii) எய்தல்
   4. வினையடி - iv) வந்தான்

| தெரிவுகள் |
|---|
| அ)1-iv 2-iii 3-ii 4-i |
| ஆ)1-iii 2-i 3-iv 4-ii |
| **இ) 1-iv 2-iiii 3-i 4-ii** |
| ஈ) 1-i 2-iii 3-ii 4-iv |

5. சார்பெழுத்துகள் என்பவை
   அ) ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகளைச் சார்ந்து வருபவை.
   ஆ) மூவகை அளபெடைகளை மட்டும் சார்ந்து வருபவை.
   **இ) முதலெழுத்துகளைச் சார்ந்து வருபவை**
   ஈ) ஒரு மொழியைச் சார்ந்து வருபவை.
6. பொருத்துக.
   1. சொல்லிசை அளபெடை - i) இயற்றியவர்
   2. முதனிலை திரிந்த தொழிற்பெயர் - ii) ஓஒதல் வேண்டும்
   3. வினையாலணையும் பெயர் - iii) உரனசைஇ
   4. செய்யுளிசை அளபெடை - iv) பேறு

| தெரிவுகள் |
|---|
| அ) 1-iv 2-iii 3-i 4-ii |
| **ஆ) 1-iii 2-iv 3-i 4-ii** |
| இ) 1-iv 2-i 3-ii 4-iii |
| ஈ) 1-i 2-iv 3-iii 4-ii |

7. சொல் என்பது
   அ) ஓர் எழுத்து தனித்து உச்சரிக்கப்படுவது
   ஆ) பல எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது
   இ) இரண்டு எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது
   **ஈ) ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகளோடு சேர்ந்தோ பொருளைத் தருவது.**
8. பொதுமொழி என்பது
   அ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளில் வருவது
   ஆ) குறிப்பிட்ட ஒரு இனத்தவருக்கான பொதுவான மொழி
   **இ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து பொதுவாய் அமைவது.**
   ஈ) மக்களால் பொதுவாகப் பேசப்படும் மொழி.
9. வெ.'..'.குவார்க்கில்லை, எடுப்பதூஉம்- இச்சொற்களில் உள்ள அளபெடைகள்
   அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
   இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை **ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை**

10. இலையுதிர்காலம் ...... சருகாயின!
மழைக்காலம் ...... தழைத்தன!
சருகுகளோ செழுமையான உரங்களாயின!
- புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.
அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின ஆ) காடெல்லாம், வளர்ந்தன
**இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்** ஈ) மலையெல்லாம், முளைந்தன

11. ஆலும் வேலும் பல்லுக்குறுதி,
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.
அ) ஆலமரம், வேப்பமரம் - ரு க **ஆ) ஆலமரம், வேலமரம் - ச; உ**
இ) அரசமரம், வேங்கைமரம் - க, உ ஈ) வேப்பமரம், ஆலமரம் - ச; சு

# இயல் - 2

1. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ஐயூர் முடவனார் | - அ) வாயுதாரணை | - i) செந்தமிழின் பின்னுதித்த தென்றலே |
| 2. ஔவையார் | - ஆ) சிலப்பதிகாரம் | - ii) வண்டொடு புக்க மணவாய்த் தென்றலே |
| 3. இளங்கோவடிகள் | - இ) புறநானூறு | - iii) வாயுவழக்கம் ஆயுள் அறிந்து செறித்தடங்கில் |
| 4. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் | - ஈ) பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது | -iv) வளி மிகின் வலி இல்லை |

அ) 1-அ-iv, 2-ஆ-i, 3-இ-ii, 4-ஈ-iii ஆ) 1-இ-ii, 2-அ-iii, 3-ஈ-i, 4-ஆ-iv
**இ) 1-இ-iv, 2-அ-iii, 3-ஆ-ii, 4-ஈ-i** ஈ) 1-ஆ-iii, 2-ஈ-iv, 3-இ-ii, 4-அ-i

2. இயற்கை நிகழ்வோடு ஒப்பிடத் தகுந்தனவற்றைப் பொருத்துக.

| | |
|---|---|
| 1. துளிர்க்கும் நாற்றுகள் | - i) அச்சம் |
| 2. இளந்தென்றல் | - ii) குழந்தைகள் முகம் |
| 3. சுழன்றடிக்கும் புயல் | - iii) நம்பிக்கை |
| 4. மலர்ந்த மலர்கள் | - iv) இன்ப உணர்வு |

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| **அ)** | **1- iii** | **2- iv** | **3- i** | **4-ii** |
| ஆ) | 1- iv | 2- iii | 3- ii | 4- i |
| இ) | 1- i | 2- ii | 3- iv | 4- iii |
| ஈ) | 1- iii | 2- i | 3- iv | 4- ii |

3. “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்” - இப்பழமொழி உணர்த்தும் பொருள்.
அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.
**ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.**
இ) உரிய காலத்தில் செயலுக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.

4. காற்றை பாரதியார் ‘மயலுறுத்து’ அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர்
அ) மணம் வீசும் காற்றாய் நீ வா **ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா**
இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா“

5. பாரதியார் பணியாற்றிய இதழ்கள்
அ) இந்தியா, குயில் ஆ) புதுவை முரசு, இந்தியா
**இ) சுதேசமித்ரன், இந்தியா** ஈ) குடியரசு, புதுவை முரசு

6. ‘நறுவீ’ என்னும் சொல்லின் பொருள்
அ) நல்ல மலர்கள் ஆ) நன்கு விரிந்த மலர்கள்
இ) மகரந்தம் தூவும் மலர்கள் **ஈ) நறுமணமுடைய மலர்கள்**

7. தடக்கை - இலக்கணக் குறிப்பு
அ) வினையாலணையும் பெயர் ஆ) பண்புத்தொகை
**இ) உரிச்சொற்றொடர்** ஈ) உம்மைத்தொகை

8. தைத்திங்கள் என்பது
அ) அன்மொழித்தொகை ஆ) உருபும் பயனும் உடன்தொக்கதொகை
இ) உம்மைத்தொகை **ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை**

9. அண்ணன்தம்பி வந்தனர் - இத்தொடரில் உள்ள தொகைச் சொல்லின் விரி
**அ) அண்ணனும் தம்பியும்** ஆ) அண்ணனுக்குத் தம்பி
இ) அண்ணனால் தம்பி ஈ) அண்ணனுடன் தம்பி

10. ‘குணக்கு’ எண்ணும் சொல்குறிக்கும் பொருள்
**அ) கிழக்கு** ஆ) குடக்கு இ) குளிர்ச்சி ஈ) தென்றல்

## இயல் - 3

1. **கூற்று** : மலைபடுகடாம் என்பது ஆற்றுப்படை நூல்களில் ஒன்று.
**காரணம்** : புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரை வழிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.
அ) கூற்று மட்டும் சரி **ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி**
இ) காரணம் மட்டும் சரி ஈ) கூற்று காரணம் இரண்டிற்கும் தொடர்பில்லை
2. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.
1) பாதுகாப்பற்ற மன்னன் - அ) மெய்ப்பொருள் காண்பதறிவு
2) இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் என்ன பயன் - ஆ) ஏமரா மன்னன்
3) உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு - இ) கண்ணோட்டம் இல்லாத கண்
அ) 1-இ, 2-ஆ, 3-அ **ஆ) 1-ஆ, 2-இ, 3-அ** இ) 1-அ, 2-இ, 3-ஆ ஈ) 1-இ, 2-அ, 3-ஆ

## இயல் - 4

1. செயற்கை நுண்ணறிவு ஒரு
***அ) மென்பொருள்*** ஆ) இயந்திரம் இ) கணக்கிடும் கருவி ஈ) மின்னணுக் கருவி
2. பெப்பர் என்பது
அ) மொழிநடையை உருவாக்கும் மென்பொருள் ஆ) உரையாடு மென்பொருள்
இ) செயற்கை நுண்ணறிவுக் கணினி ***ஈ) ஜப்பானிய வங்கியின் இயந்திர மனிதன்***
3. திராவிட வேதம்
அ) பெரிய புராணம் ***ஆ) பெருமாள் திருமொழி*** இ) திருக்குறள் ஈ) முகுந்த மலை
4. மீளாத் துயர்
அ) வினையாலணையும் பெயர் ***ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்***
இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சத் தொடர்
5. தண்பெயல் என்பது
அ) நிறை வெள்ளம் ஆ) வெள்ளக்காடு ***இ) குளிர்ந்த மழை*** ஈ) பெருமழை
6. திணைவழுவமைதி
அ) ‘இந்த பாப்பா தூங்கமாட்டாள்’ என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது
ஆ) இரவெல்லாம் நாய் கத்திக் கொண்டே இருந்தது
இ) வாடா செல்லம் என்று தாய் மகளை அழைப்பது
***ஈ) ‘என் தங்கை வந்தாள்’ என்று பசுவைக் குறிப்பிடுவது***
7. ‘ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் நாளை இந்தியா வருகிறார்!’ என்பது
அ) பால் வழுவமைதி ஆ) இட வழுவமைதி
***இ) கால வழுவமைதி*** ஈ) மரபு வழுவமைதி
8. பொருத்துக.
1) பறவைகள், குன்றுகள் - i) முன்னிலைப் பெயர்கள்
2) பெண்கள், குழந்தைகள் - ii) அஃறிணைப் பலவின்பால்
3) படித்தனர், பறந்தன - iii) படர்க்கை வினைகள்
4) நீங்கள், நீவிர் - iv) உயர்திணைப் பலர்பால்

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1- ii | 2- iii | 3- i | 4- iv |
| ஆ) | 1- iv | 2- iii | 3- i | 4- ii |
| **இ)** | **1- ii** | **2- iv** | **3- iii** | **4- i** |
| ஈ) | 1- iii | 2- iv | 3- i | 4-ii |

9. வெட்டிய மரங்களுக்கு ஈடாக ________ நட்டனர்.
அ) கொடிகளை ஆ) நாற்றுகளை இ) மரங்களை ***ஈ) மரக்கன்றுகளை***
10. கொடுக்கப்பட்ட சொற்கள் அமைந்த பொருத்தமான தொடரைத் தெரிக.
(ஏரி, ஆறு, மலை, மழை, மேகம், குளம்)
அ) மலைமீது மழைபெய்து ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.
ஆ) **கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.**
இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.
ஈ) மலைமீது மழைபெய்ய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

# இயல் - 5

1. 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்னும் நூலின் ஆசிரியர்
   அ) கண. முத்தையா ஆ) வைரமுத்து
   **இ) ராகுல் சாங்கிருத்யாயன்** ஈ) யூமா வாசுகி
2. பொருத்துக.
   1) அருள் - i) மயக்கம்
   2) மருள் - ii) தெளிவு
   3) தெருள் - iii) நூறு
   4) சதம் - iv) கருணை

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iii | 2-i | 3- iv | 4-ii |
| ஆ) | 1-ii | 2-iv | 3-i | 4-iii |
| **இ)** | **1-iv** | **2-i** | **3-ii** | **4- iii** |
| ஈ) | 1-iii | 2-ii | 3-iv | 4-i |

3. நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டியவர்
   அ) பரஞ்சோதி முனிவர் ஆ) இரவீந்திரநாத் தாகூர்
   **இ) செய்குதம்பிப் பாவலர்** ஈ) பாரதியார்
4. பெருக்கி, திருத்தி, அகற்றி - என்பன
   அ) பெயரெச்சங்கள் **ஆ) வினையெச்சங்கள்**
   இ) உம்மைத்தொகைகள் ஈ) வினைத்தொகைகள்
5. திருத்தக்கத்தேவரும் வில்லிபுத்தூராரும் வடமொழி மூலங்களைத் தழுவி எழுதிய நூல்கள்
   அ) மகாபாரதமும் இராமாயணமும்
   ஆ) திருவிளையாடற் புராணமும் சீவக சிந்தாமணியும்
   **இ) சீவக சிந்தாமணியும் மகாபாரதமும்**
   ஈ) சீவக சிந்தாமணியும் இராமாயணமும்
6. பரஞ்சோதி முனிவரால் இயற்றப்படாத நூல்
   **அ) கந்தர் கலிவெண்பா** ஆ) வேதாரண்யப் புராணம்
   இ) திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா ஈ) திருவிளையாடற் புராணம்
7. பொருத்துக.
   1) உதவும் பொருட்டு வினவுவது - i) மறை விடை
   2) பொருளை வாங்குதல் - ii) நேர் விடை
   3) வெளிப்படையாக கூறுதல் - iii) கொளல் வினா
   4) மறுத்துக் கூறுதல் - iv) கொடை வினா

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-i | 3- iii | 4-ii |
| ஆ) | 1-iii | 2-ii | 3-i | 4-iv |
| **இ)** | **1-iv** | **2-iii** | **3-ii** | **4- i** |
| ஈ) | 1-i | 2-iv | 3-ii | 4-iii |

8. 'ஒரு கவிதை எழுதித் தருகிறாயா?' என்ற கேள்விக்கான மறைவிடை
   **அ) எழுதித் தரமாட்டேன்** ஆ) நாளை எழுதுகிறேன்
   இ) எழுதும் மனநிலை இல்லை ஈ) நீயே எழுதிக்கொள்
9. 'கண் உலர்ந்து எரிச்சல் அடையும்' என்ற உறுவது கூறல் விடைக்கேற்ற வினா
   அ) உனக்குக் கதை எழுதத் தெரியுமா? **ஆ) உறக்கம் வரவில்லையா?**
   இ) பாடலைப் பாடிக் காட்டுகிறாயா? ஈ) இக்கட்டுரையை ஐந்து வகுப்புகளுக்குப் படித்துக் காட்டுகிறாயா?
10. இனமொழி விடை
    **அ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு, பாடுவேன் என்று கூறுவது**
    ஆ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு கால் வலிக்கும் என்று கூறுவது
    இ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு மாட்டேன் என்று கூறுவது
    ஈ) ஆடுவாயா? என்ற வினாவிற்கு நீயே ஆடு என்று கூறுவது
11. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க
    தவழும்போது ஒரு பெயர்
    விழும்போது ஒரு பெயர்
    உருளும்போது ஒரு பெயர்
    திரண்டோடும்போது ஒரு பெயர் - அவை யாவை?
    அ) நீர், மழை, ஆறு, ஓடை **ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்**
    இ) மாரி, கார், நீர், புனல் ஈ) மழை, புனல், மேகம், நீர்

12. Mosquito - bite ……
Disturbing the mother
tiny anklet - இந்த ஆங்கிலக் கவிதைக்கான பொருத்தமான தமிழாக்கம்
அ) கொசுகடிக்கு தாயே காவல் காப்பார் குழந்தையின் கொலுசொலியோடு
ஆ) கொசுக்கடியில் உறங்கா தாய், எழுப்பும் குழந்தையின் கொலுசொலியும்
**இ) கடிக்கும் கொசு, தாயை எழுப்பும் சின்னக் கொலுசு**
ஈ) கொசுக்களின் தொல்லை, உறங்கா அன்னையும் குழந்தையும் உறங்கா இரவும்.

## இயல் - 6

1. பொருத்துக.
1) பொய்க்கால் குதிரையாட்டம் - i) கரகாட்டம்
2) தப்பாட்டம் - ii) உறுமி
3) கும்பாட்டம் - iii) புரவியாட்டம்
4) தேவராட்டம் - iv) தோற்கருவி

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-ii | 3- i | 4-iii |
| **ஆ)** | **1-iii** | **2-iv** | **3-i** | **4-ii** |
| இ) | 1-iv | 2-iii | 3-ii | 4- i |
| ஈ) | 1-ii | 2-iv | 3-i | 4-iii |

2. கரகாட்டத்திலும், தெருக்கூத்திலும் நிகழ்த்தப்படும் கதைகள்……
***அ) சிலப்பதிகாரமும் மகாபாரதமும்*** ஆ) இராமாயணமும் சிலப்பதிகாரமும்
இ) மகாபாரதமும் மணிமேகலையும் ஈ) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

3. பொருத்துக.
1) சுட்டி - i) காதில் அணிவது
2) குழை - ii) காலில் அணிவது
3) பண்டி - iii) நெற்றியில் அணிவது
4) கிண்கிணி - iv) வயிறு

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-i | 3- iiii | 4-ii |
| ஆ) | 1-i | 2-ii | 3-iv | 4-iii |
| இ) | 1-iv | 2-iii | 3-ii | 4- i |
| **ஈ)** | **1-iii** | **2-i** | **3-iv** | **4-ii** |

4. பொருத்துக.
1) வில் பிடித்த - i) நான்காம் வேற்றுமைத் தொகை
2) நெடும்படை - ii) வினைத்தொகை
3) காலதூதன் - iii) பண்புத்தொகை
4) விரிசோதி - iv) இரண்டாம் வேற்றுமைத்தொகை

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| ***அ)*** | **1-iv** | **2-iii** | **3- i** | **4-ii** |
| ஆ) | 1-ii | 2-iv | 3-iii | 4-i |
| இ) | 1-iii | 2-i | 3-ii | 4- iv |
| ஈ) | 1-iv | 2-iii | 3-ii | 4-i |

5. பொருத்துக.
1) குறிஞ்சி - i) உப்புவிளைத்தல்
2) முல்லை - ii) நெல்லரிதல்
3) மருதம் - iii) நிரை மேய்த்தல்
4) நெய்தல் - iv) தேனெடுத்தல்

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| ***அ)*** | **1-iv** | **2-iii** | **3- ii** | **4-i** |
| ஆ) | 1-iii | 2-ii | 3-iv | 4-i |
| இ) | 1-i | 2-iv | 3-ii | 4- iii |
| ஈ) | 1-ii | 2-i | 3-iii | 4-iv |

6. முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள்
அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், தினை
**இ) வரகு, சாமை** ஈ) மீன், செந்நெல்

7. எர்லி மார்னிங் எழுந்து வாக்கிங் சென்று வந்து டீ குடித்த அம்மா நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். - இத்தொடரில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச்சொல் வரிசையை அறிக.
அ) வைகறை, நடைபயிற்சி, பத்திரிக்கை, தேநீர்
ஆ) அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிக்கை
இ) காலை, நடை, தேநீர், செய்தி
**ஈ) வைகறை, நடைபயிற்சி, தேநீர், செய்தித்தாள்**

# இயல் - 7

1. தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தமிழகத்தின் வடக்கெல்லை, தெற்கெல்லை
   அ) வேங்கடமலை, செங்கோட்டை **ஆ) வேங்கடமலை, குமரிமுனை**
   இ) சென்னை, கன்னியாகுமரி ஈ) திருப்பதி, திருவிதாங்கூர்

2. **கூற்று** : ம.பொ.சி எட்டாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டார்.
   **காரணம்** : குடும்ப வறுமையின் காரணமாகப் பள்ளியிலிருந்து நின்றுவிட்டார்.
   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி
   **இ) கூற்று தவறு, காரணம் சரி** ஈ) கூற்று தவறு, காரணம் தவறு

3. 'மாட்டைப் பூட்டிக் காட்டைக் கீறுவோம்' – காடும் கீறலும் குறிப்பது
   அ) வனத்தையும் விலங்கையும் ஆ) வயலையும் வனத்தையும்
   **இ) வயலையும் உழவையும்** ஈ) வனத்தையும் உழவையும்

4. பொழுதேறப் பொன்பரவும் - 'பொன்பரவும்' என்னும் சொல்லின் பொருள்
   **அ) கதிரவனின் ஒளி பரவும்** ஆ) நிலவின் ஒளி பரவும்
   இ) நிலத்தில் பசுமை பரவும் ஈ) நிலத்தில் விதை பரவும்

5. மெய்க்கீர்த்தி என்பது
   அ) கல்வெட்டில் பொறிக்கப்பட்ட சிற்பங்கள்
   ஆ) அழியாப்புகழ் பெற்ற நூல்கள்
   **இ) புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை**
   ஈ) மெய்யான புகழ், கொடை, வீரம் முதலியன குறித்த நூல்கள்

6. "மருளுடையன இளமான்களே" இத்தொடர் உணர்த்தும் உட்கருத்து
   அ) மான்கள் மருள்கின்றன ஆ) பெண்கள் மருள்கின்றனர்
   **இ) மக்கள் மருளவில்லை** ஈ) இளமான்கள் மருளவில்லை

7. பொருத்துக.
   1) ஓசுநர் - i) நறுமணப்பொடி
   2) இசை - ii) எண்ணெய் விற்போர்
   3) சுண்ணம் - iii) செல்வம்
   4) வெறுக்கை - iv) பாணர்

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-ii | 2-i | 3-iv | 4-iii |
| ஆ) | 1-i | 2-iv | 3-iii | 4-ii |
| இ) | 1-iv | 2-ii | 3-iii | 4-i |
| **ஈ)** | **1-ii** | **2-iv** | **3-i** | **4-iii** |

8. பொருத்துக.
   1) கோட்டைக் காத்தல் - i) வஞ்சித் திணை
   2) வலிமையே பெரிது - ii) நொச்சித் திணை
   3) மண்ணாசை - iii) வெட்சித் திணை
   4) ஆநிரை கவர்தல் - iv) தும்பைத் திணை

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iii | 2-ii | 3-iv | 4-i |
| **ஆ)** | **1-ii** | **2-iv** | **3-i** | **4-iii** |
| இ) | 1-iv | 2-i | 3-iii | 4-ii |
| ஈ) | 1-ii | 2-iii | 3-i | 4-iv |

9. பொருத்துக.
   1) கொழு - i) அகலிகை
   2) பதம் - ii) விரைந்து
   3) கு.ப.ரா. - iii) பக்குவம்
   4) கடுகி - iv) கம்பு

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| **அ)** | **1-iv** | **2-iii** | **3-i** | **4-ii** |
| ஆ) | 1-ii | 2-i | 3-iv | 4-iii |
| இ) | 1-iii | 2-iv | 3-ii | 4-i |
| ஈ) | 1-i | 2-iii | 3-ii | 4-iv |

10. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான வரியைக் கண்டறிக.
   அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை. நல்வினை, தீவினை
   **ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை. உயர்திணை, அஃறிணை**
   இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம். அறம், பொருள், இன்பம்
   ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல். பனை, திணை

## இயல் - 8

1. பொருத்துக.
   1) திருமுடிக்காரி - i) பெருஞ்சித்திரனார்
   2) ஈகைப்புலவர் - ii) கபிலர்
   3) உதவியாண்மை - iii) ஆவூர் மூலங்கிழார்
   4) போர் அறம் - iv) பூதன் தேவனார்

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| **அ)** | **1-ii** | **2-i** | **3-iv** | **4-iii** |
| ஆ) | 1-i | 2-iv | 3-iii | 4-ii |
| இ) | 1-iv | 2-i | 3-ii | 4-iii |
| ஈ) | 1-ii | 2-iii | 3-i | 4-iv |

2. நற்றிணை குறிப்பிடும் வாய்மை குறித்த தொடர்
   அ) வாய்மையே நல்லறம் **ஆ) பிழையா நன்மொழி**
   இ) வாய்மையே வெல்க ஈ) உயிரினும் மேலானது மெய்

3. பொருத்துக.
   1) கந்தை - i) சன்னல்
   2) தூரிகை - ii) பழைய
   3) சாளரம் - iii) மண்துகள்
   4) புழுதி - iv) தீட்டும் கருவி

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iii | 2-ii | 3-i | 4-iv |
| ஆ) | 1-iv | 2-i, | 3-iv | 4-ii |
| இ) | 1-ii | 2-iii | 3-iv | 4-i |
| **ஈ)** | **1-ii** | **2-iv** | **3-i** | **4-iii** |

4. கவியரசு கண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற படைப்பு (புதினம்)
   அ) தைப்பாவை ஆ) இயேசு காவியம் இ) காலக்கணிதம் **ஈ) சேரமான் காதலி**

5. மாறாதிருப்பவை எனக் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுவன
   அ) மானிடர், காடுமேடு, உலகம் ஆ) கல், மண், சாலை
   **இ) கல், மரம், காடுமேடு** ஈ) சாலை, தலைவர், உலகம்

6. பொருத்துக.
   1) யாப்பின் உறுப்புகள் - i) நான்கு
   2) அசை - ii) ஏழு
   3) பாவின் வகைகள் - iii) இரண்டு
   4) தளை - iv) ஆறு

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-i | 2-iv | 3-ii | 4-iii |
| **ஆ)** | **1-iv** | **2-iii** | **3-i** | **4-ii** |
| இ) | 1-iv | 2-ii | 3-i | 4-iii |
| ஈ) | 1-ii | 2-iv | 3-iii | 4-i |

7. இரண்டு அடிகளைப் பெற்று வருவது
   அ) கலிவெண்பா ஆ) ஆசிரியப்பா **இ) குறள் வெண்பா** ஈ) நேரிசை வெண்பா

8. பொருள் என்னும் ஈற்றுச் சீரின் வாய்பாடு
   **அ) மலர்** ஆ) பிறப்பு இ) நாள் ஈ) காசு

9. மரபுத்தொடருக்கான பொருளைப் பொருத்துக.
   1) கயிறு திரித்தல் - i) அதிகமாகப் பேசுதல்
   2) கொட்டி அளத்தல் - ii) சொல்லாமல் செல்லுதல்
   3) முதலைக் கண்ணீர் - iii) பொய் கூறுதல்
   4) கம்பி நீட்டுதல் - iv) பொய்யழுகை

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-ii | 3-iii | 4-i |
| **ஆ)** | **1-iii** | **2-i** | **3-iv** | **4-ii** |
| இ) | 1-i | 2-iii | 3-ii | 4-iv |
| ஈ) | 1-iv | 2-ii | 3-i | 4-iii |

10. 'ஆறு' என்னும் சொல் தரும் வெவ்வேறு பொருளைக் கொண்டு உருவாக்கிய பொருத்தமான தொடரை அறிக.
   அ) கடற்கரையோரம் நடப்பட்ட ஆறு மரக்கன்றுகளும் வளர்ந்து மிகப்பெரிய மரங்களானதைக் கண்ட முதியவர் மகிழ்ந்தார்.
   ஆ) ஆறு கரைபுரண்டு ஓடியதில் பல மரங்கள் அடித்து செல்லப்பட்டது.
   இ) தந்தைக்கு நண்பகல் உணவை ஆற்றைக் கடந்து கொண்டு செல் என்று அன்னை கூறினார்.
   **ஈ) நதிவழியே சென்று அறுவரைக் கண்டு அவர்களது துன்பத்தைத் தணித்து வருவாயாக என்று குரு கூறினார்.**

## இயல் - 9

1. கலையும் அதன் பொருளும் பற்றி ஜெயகாந்தன் கூறுவது
   அ) அழகியலோடும் பொருள் நிறைந்த படைப்பாகவும் இருத்தல் வேண்டும்.
   **ஆ) கலை, கலைத்தன்மையோடும் அதன் பொருள் சமூகப் பார்வையோடும் இருக்க வேண்டும்.**
   இ) இலக்கண வளத்தோடு கலைப்படைப்பு அமைதல் வேண்டும்.
   ஈ) கலைத்தன்மையோடும் கட்டமைப்புகளோடும் அமைதல் வேண்டும்.

2. பொருத்துக.
   1) சில நேரங்களில் சில மனிதர்கள் - i) திரைப்படமான புதினம்
   2) எதற்காக எழுதுகிறேன்? - ii) சிறுகதை
   3) தர்க்கத்திற்கு அப்பால் - iii) சாகித்திய அகாதெமி விருது
   4) யாருக்காக அழுதான்? - iv) கட்டுரைத் தொகுப்பு
   அ) 1-i, 2-iv, 3-ii, 4-iii **ஆ) 1-iii, 2-iv, 3-ii, 4-i**
   இ) 1-iv, 2-ii, 3-i, 4-iii ஈ) 1-iii, 2-i, 3-iv, 4-ii
3. நாகூர்ரூமி எழுதத் தொடங்கிய இதழ்
   அ) ஆனந்த விகடன் ஆ) இந்தியா இ) குடியரசு ***ஈ) கணையாழி***
4. நாகூர்ரூமி எழுதிய நாவலின் பெயர்
   அ) சித்தாளு ஆ) கொல்லிப்பாவை இ) கணையாழி ***ஈ) கப்பலுக்குப் போன மச்சான்***
5. கருணையன் மார்பில் அணிந்த அணிகலனாக உவமிக்கப்படுவது
   அ) நெல்மணிகளைக் கோவையாக கொண்ட மாலை
   ***ஆ) அறங்களைக் கோவையாக இணைத்த தவமணிமாலை***
   இ) அன்னையின் அன்பான வழிகாட்டலில் இணைத்த தவமாலை
   ஈ) மலர்களையும் கண்ணீரையும் கொண்ட அன்பு மாலை
6. ‘‘விரிந்தன கொம்பில் <u>*கொய்த வீ*</u> யென உள்ளம் வாட’’ – அடிக்கோடிட்ட தொடரின் பொருள்
   ***அ) பறித்த மலர்*** ஆ) வீழ்ந்த மலர்
   இ) உதிர்ந்த மலர் ஈ) மணம்வீசும் மலர்
7. வீரமாமுனிவர் இயற்றிய சிற்றிலக்கியங்களுள் ஒன்று
   அ) தொன்னூல் விளக்கம் ஆ) சதுரகராதி
   ***இ) கித்தேரி அம்மாள் அம்மானை*** ஈ) பரமார்த்த குரு கதைகள்
8. ‘தீவகம்’ என்னும் சொல்லின் பொருள்
   அ) நெருப்பு ஆ) தீவுத்திடல் ***இ) விளக்கு*** ஈ) தீவுப்பகுதி
9. ‘‘எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
   சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்’’ – என்று கூறும் நூல்
   அ) நன்னூல் ***ஆ) தண்டியலங்காரம்***
   இ) தொல்காப்பியம் ஈ) மாறனலங்காரம்
10. பொருத்துக.
   1) தீவக அணி - i) உள்ளதை உள்ளவாறு கூறுவது
   2) தற்குறிப்பேற்ற அணி - ii) சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்திப் பொருள்கொள்வது
   3) நிரல் நிறையணி - iii) பாடலின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அப்பாடலின் பல இடங்களில் உள்ள சொற்களோடு பொருந்துவது
   4) தன்மையணி - iv) இயல்பாக நிகழ்வதில் தன் கருத்தை ஏற்றிக் கூறுவது
   **அ) 1-iii, 2-iv, 3-ii, 4-i** ஆ) 1-iv, 2-iii, 3-i, 4-ii
   இ) 1-ii, 2-i, 3-iv, 4-iii ஈ) 1-iii, 2-ii, 3-i, 4-iv
11. தற்குறிப்பேற்றம் - பிரித்து எழுதுக.
   ***அ) தன் + குறிப்பு + ஏற்றம்*** ஆ) தன் + குறிப்பு + யேற்றம்
   இ) தங் + குறிப்பு + ஏற்றம் ஈ) தன் + குறிப் + ஏற்றம்
12. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க.
   அ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று ‘அறுதியிட்டுக்’ கூறுகிறார்!
   ***ஆ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.***
   இ) திருவள்ளுவர், ‘‘அறிவுடையார் எல்லாம் உடையார்’’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்!
   ஈ) ‘திருவள்ளுவர்’, ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.
13. நீண்ட நாள் கழித்து வீட்டிற்கு வந்த மாமாவைக் கண்ட வளவன், ………… மாமா வந்திருக்கிறாரே என்று வியந்தான்.
   அ) நீர் மேல் எழுத்து போல ஆ) வாழையடி வாழையாய்
   **இ) அத்திப்பூத்தாற் போல்** ஈ) தாமரை இலை நீர் போல